டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 3.02.2026 செவ்வாய்க்கிழமை | பக்கங்கள் 31 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 186 - Madurai | Online Edition

# மத்திய பட்ஜெட் மாற்றத்தை ஏற்படுத்தும் மத்திய அமைச்சர் சிவ்ராஜ் சிங் சௌகான் தகவல்

புது தில்லி, பிப்.2

2026-27 ஆம் ஆண்டிற்கான மத்திய பட்ஜெட் முன்னெப்போதும் இல்லாத, வரலாற்று சிறப்புமிக்க பட்ஜெட் என்று விவரித்துள்ள மத்திய ஊரக மேம்பாடு, வேளாண் மற்றும் விவசாய நலத்துறை அமைச்சர் சிவ்ராஜ் சிங் சௌகான், பிரதமர் நரேந்திர மோடி தலைமையின் கீழ் வளர்ச்சியடைந்த மற்றும் தற்சார்பு இந்தியாவுக்கான வலுவான அடித்தளமாக இது உள்ளது என்று கூறியுள்ளார். பிரதமர் மோடியின் தலைமையின் கீழ் 12-வது முறையாக பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டுள்ளதும், முதலாவது பெண் நிதியமைச்சர் தொடர்ந்து 9-வது முறையாக பட்ஜெட் தாக்கல் செய்ததும் நாட்டிற்கு பெரும் பெருமையளிக்கக் கூடிய அம்சம் என்று தெரிவித்துள்ளார்.

இந்த பட்ஜெட் வளர்ச்சியடைந்த இந்தியா என்ற கனவை உணர்த்தும் காவியம் என்று அவர் கூறியுள்ளார். தேசிய உறுதிப் பாட்டை நிறைவேற்றக்கூடிய மற்றும் சமூக முன்னேற்றதுக்கான பட்ஜெட் இது என்று அவர் தெரிவித்துள்ளார். வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான சக்திமிக்க பட்ஜெட் இது என்றும் அவர் கூறி உள்ளார். பிரதமரின் தொலைநோக்கு பார்வையின் மூலம் 2047-ம் ஆண்டிற்குள் வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான, வலிமையான அடித்தளத்தை இந்த பட்ஜெட் அமைத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் நான்கு தூண்களான விவசாயிகள், இளையோர், பெண்கள் மற்றும் ஏழை மக்களின் வாழ்வாதாரத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவது குறித்து புதிய அத்தியாயத்தை இந்த பட்ஜெட் எழுதியுள்ளதாக சௌகான் தெரிவித்துள்ளார்.

விவசாயிகளின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டை கருத்தில் கொண்டு வேளாண்மைத் துறைக்கு ரூ.1.32 லட்சம் கோடி ஒதுக்கப் பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

# நானோ விழிப்புணர்வு முகாம்

மயிலாடுதுறை, பிப்.2

மயிலாடுதுறை மாவட்டம், பழையக் கூடலூர் கிராமத்தில் இப்கோ நிறுவனத்தின் சார்பில் நானோ விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.




இந்நிகழ்ச்சியில் இப்கோ கள அதிகாரி நெல் மற்றும் பருத்தி சாகுபடியில் நானோ யூரியா பிளஸ், நானோ டி.ஏ.பிமற்றும் சாகரிகா திரவ உரங்களை பயன்படுத்துவதால் பெறும் நன்மைகள் மற்றும் இத்திரவ உரங்களை இலைவழி தெளிப்பு முறையில் பயன்படுத்தும் முறை குறித்து விவரித்தார்.

மேலும், நானோ உரங்களை ட்ரோன் மூலம் தெளிக்கும் தொழில்நுட்பம் குறித்தும் விளக்கம் அளிக்கப்பட்டது. குறைந்த நேரத்தில், குறைந்த செலவில், துல்லியமாக உரங்களை தெளிக்க கிசான் ட்ரோன் எவ்வாறு பயன்படுகிறது என்பதையும், எதிர்கால வேளாண்மையில் இது முக்கியமாற்றத்தை ஏற்படுத்தும் எனவும் வலியுறுத்தப்பட்டது.

மேலும், இப்கோ சங்கட ஹரன் பீமா யோஜனா காப்பீடு திட்டம் – நானோ உரங்கள் வாங்கும் விவசாயிகளுக்கு ரூ.2,00,000 வரை விபத்துக் காப்பீட்டுத் தொகை வழங்கப்படும் என்பது குறித்தும் விவரிக்கப்பட்டது. நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைத்து விவசாயிகளுக்கும் தங்கள் பயிர்களில் இனி இப்கோ நானோ உரங்களை பயன்படுத்துவோம் என மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.




agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# விதையே விளைவுக்கு வித்தாகும்

நாமக்கல், பிப்.2

நல்விதையே பயிர் சாகுபடிக்கு முக்கியமான இடுபொருளாக விளங்குகிறது. விதைகள் நல்ல முளைப்புத்திறன், புறத் தூய்மை, அளவான ஈரப்பதம் கொண்டதாக இருத்தல் வேண்டும். நிலத்தில் ஒரு பயிரின் பயிர் எண்ணிக்கை அதன் முளைப்புத்திறன் பொருத்தே அமைகிறது. நல்ல தரமான விதைகளை விதைப்பு செய்யாவிடில் போதுமான பயிர் எண்ணிக்கை பராமரிக்கப்படாமல் விளைச்சல் குறைந்து விவசாயிகளுக்கு நஷ்டத்தை ஏற்படுத்தும்.

எனவே இதை தவிர்க்க விவசாயப் பெருமக்கள் தங்களிடம் உள்ள காய்கறி மற்றும் இதர வகை விதைகளையும், விற்பனை யாளர்கள் தாங்கள் விற்பனை செய்யும் விதைகளையும் பரிசோதனை செய்து கொள்ளலாம்.

விதையின் தரத்தை அறிந்து கொள்ள நாமக்கல் மாவட்ட ஆட்சியர் கூடுதல் வளாக கட்டிடத்தில் அறை எண்.13இல் இயங்கி வரும் விதை பரிசோதனை நிலையத்தில் ஒரு மாதிரிக்கு ரூ.80/- கட்டணம் செலுத்தி விதையின் தரத்தை அறிந்து பயனடையலாம் என வேளாண்மை அலுவலர்கள் வ.இரஞ்சிதா மற்றும் செ.தேவிப் பிரியா ஆகியோர் தெரிவித்துள்ளனர்.






அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்–ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# உளுந்து பயிரில் ட்ரைக்கோடெர்மா விரிடி மூலம் விதைச் சிகிச்சை குறித்த களச் செயல் விளக்கமளித்த வேளாண்மை கல்லூரி மாணவர்



மதுரை, பிப்.2

மதுரை மாவட்டம், கொட்டாம்பட்டி அருகே உள்ள பள்ளப்பட்டி கிராமத்தில், மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் இறுதி ஆண்டு பயிலும் மாணவர் ச.கமலேஷ், ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டம் கீழ் அங்குள்ள விவசாயிகளுக்கு உளுந்து பயிரில் ஏற்படும் விதை மற்றும் மண் வழி நோய்களை கட்டுப்படுத்தி, முளைப்பு மற்றும் விளைச்சலை அதிகரிக்கும் நோக்கில் ட்ரைக்கோடெர்மா விரிடி (Trichoderma viride) மூலம் விதைச் சிகிச்சை செய்வது குறித்து ஒரு களச் செயல் விளக்க நிகழ்ச்சியை நடத்தினார்.

இந்நிகழ்ச்சியில், பரிந்துரைக்கப்பட்ட அளவில் ட்ரைக்கோடெர்மா விரிடியை உளுந்து விதைகளுடன் சமமாக கலந்து, விதைப்பு முன் சிகிச்சை செய்யும் முறையை விவசாயிகளுக்கு நேரடியாக எடுத்துக் காட்டப்பட்டது.

இந்த உயிரியல் கட்டுப்பாட்டு முறையின் மூலம் வேர் அழுகல், வாடல் போன்ற நோய்களை ஆரம்ப நிலையிலேயேத் தடுக்க முடியும் என்பதும், விதைகளின் முளைப்பு சீராக நடைபெறுவதுடன் செடிகளின் வளர்ச்சி வலுப்பெறுவதும் விளக்கப்பட்டது.

மேலும், ரசாயன மருந்துகளின் பயன்பாட்டைக் குறைத்து, சுற்றுச்சூழலுக்கு உகந்த மற்றும் குறைந்த செலவிலான இந்த உயிரியல் விதைச் சிகிச்சை முறையின் முக்கியத்துவம் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

**அன்புடையீர்,**

நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ் கடந்த 13 ஆண்டுகளாக மின் நாளிதழ் வடிவில் லட்சக்கணக்கான விவசாயிகள், வேளாண் துறை மாணவர்கள் ஆகியோருக்குத் தேவையான தகவல்களை செய்தி வடிவிலும், கட்டுரை வடிவிலும் வழங்கி வருகிறது. இதனால் பலனடைந்தோர் ஏராளம்.

வேளாண் துறை அதிகாரிகள், வேளாண் துறை வல்லுநர்கள், வேளாண் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், மத்திய, மாநில அரசுத் துறை அதிகாரிகள் ஆகியோர் விவசாயிகள், மாணவர்கள் பயனடையும் வகையில், பல்வேறு தகவல்களை செய்தி வடிவிலும் கட்டுரை வடிவிலும் அளித்து வருகின்றனர்.

இத் தருணத்தில், நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ், நூல் வடிவில் ஆண்டு மலரை வெளியிட முடிவு செய்துள்ளது. இந்த மலர் விரைவில் வெளியாகவிருக்கிறது. இந்த ஆண்டு மலரில் விவசாயம் தொடர்பான ஏராளமான கட்டுரைகள், விவசாயிகளின் அனுபவங்கள், வெற்றிக் கதைகள், சந்தித்த பிரச்சினைகள் உள்ளிட்டவை இடம்பெறவுள்ளன.





இந்த ஆண்டு மலர் வேளாண் துறை சார்ந்த மாணவர்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே, இந்த ஆண்டு மலரை வாங்கி பயனடையுமாறு மாணவர்களுக்குப் பரிந்துரை செய்யும்படி தங்களை பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், இந்த மலர் ஆயிரக்கணக்கான விவசாயிகளைச் சென்றடையவுள்ளதால், தங்களது கல்லூரி / நிறுவனங்கள் தொடர்பான விளம்பரங்களை இந்த மலரில் அளித்து உதவும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள்
உண்மையுள்ள

ஆசிரியர் & வெளியீட்டாளர்
எம்.ஜெ.வாசுதேவன்

தொடர்புக்கு
+91 80563 05483
+91 9344811812

**நன்றி**

# வேம்பு சார்ந்த பொருட்கள் - இயற்கை பூச்சி மேலாண்மை

வேம்பு (Neem - Azadiractin indica) இயற்கை பூச்சிக்கொல்லி பண்புகள் கொண்ட ஒரு முக்கிய மரமாகும். வேதியியல் பூச்சிக்கொல்லிகளைப் போல நேரடியாக பூச்சியின் நரம்பு மண்டலத்தையோ அல்லது செரிமான மண்டலத்தையோ பாதிக்காமல், வேம்பு சார்ந்த பொருட்கள் பூச்சிகளின் ஹார் மோன் அமைப்பில் செயல்படுகின்றன. இதனால் பூச்சிகளில் எதிர்ப்பு சக்தி உருவாகும் வாய்ப்பு குறைகிறது.

**வேம்பில் உள்ள செயல்படும் சேர்மங்கள்**

வேம்பில் உள்ள பூச்சி கட்டுப்பாட்டு திறன் கொண்ட சேர்மங்கள் லிமோனாய்டுகள் (Limonoids) எனப்படும் இயற்கைப் பொருட் களைக் கொண்டவை. அவற்றில் முக்கியமானவை:

அசாடிராக்டின் (Azadirachtin)

சலனின் (Salannin)

மெலியாண்ட்ரியால் (Meliantriol)

நிம்பின் (Nimbin)

இதில் அசாடிராக்டின் மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. இது பெரும்பாலான பூச்சிகள் மீது சுமார் 90% வரை விளைவைக் காட்டுகிறது. பூச்சிகளின் உணவு உண்ணும் திறன், வளர்ச்சி, உருமாற்றம் மற்றும் இனப்பெருக்கத்தைத் தடுக்கிறது.

**1. வேப்பங்கொட்டை நீர் சாறு (Neem Kernel Aqueous Extract - NKAE)**

**தயாரிக்கும் முறை :** 1 கிலோ சுத்தமான வேப்ப விதைகளை எடுத்து, தேயிலைத் தூள் போல நன்றாகப் பொடி செய்ய வேண்டும். அரைக்கும் போது எண்ணெய் வெளியே வராதபடி கவனிக்க வேண்டும். இந்தப் பொடியை 10 லிட்டர் சுத்தமான தண்ணீரில் ஊற வைக்க வேண்டும். 10 மில்லி நியூட்ரல் அட்ஜு வண்ட் (எமல்சிஃபையர்/ஸ்ப்ரெடர் கலவை) சேர்த்து நன்கு கிளற வேண்டும். கலவையை இரவு முழுவதும் ஊற விட வேண்டும்.

மறுநாள், சுத்தமான மஸ்லின் துணியால் வடிகட்ட வேண்டும். எச்சத்தில் மீண்டும் தண்ணீர் சேர்த்து 2-3 முறை சாறு பிரித்தெடுக்கலாம். மீதமுள்ள எச்சத்தை உயிர் உரமாக பயன்படுத்தலாம்.

## NKAE தெளிப்பு முறையும் பயன்களும்

அனைத்து பயிர்களுக்கும் 1.25% அல்லது 5% செறிவில் தெளிக்கலாம். குறைந்த செறிவில் தடுப்பு மருந்தாக, அதிக செறிவில் (5%) பாதுகாப்பு முகவராக பயன்படுத்தலாம். தயாரித்த நாளிலேயே தெளிப்பு திரவத்தை பயன்படுத்த வேண்டும்.




மதியம் குறைந்த சூரிய ஒளி உள்ள நேரத்தில் தெளிப்பது சிறந்தது. NKAE-ன் விளைவு 7—10 நாட்கள் நீடிக்கும். அனைத்து இலைகளும் முழுமையாக நன்கு நனைவதற்கு கவனம் செலுத்த வேண்டும்.

**2. வேப்பம் புண்ணாக்கு சாறு**

1 லிட்டர் தண்ணீருக்கு 100 கிராம் வேப்பம் புண்ணாக்கு தேவை. புண்ணாக்கை ஒரு மஸ்லின் பையில் வைத்து தண்ணீரில் ஊற வைக்க வேண்டும். இந்த சாறு பூச்சி கட்டுப் பாட்டுடன் சேர்த்து மண்ணின் வளத்தையும் மேம்படுத்துகிறது.

**3. வேப்ப இலைச் சாறு**

**தயாரிப்பு :** 5 லிட்டர் தண்ணீருக்கு 1 கிலோ புதிய வேப்ப இலைகள் தேவை. இலைகளை இரவு முழுவதும் தண்ணீரில் ஊற வைக்க வேண்டும்.மறுநாள், இலைகளை அரைத்து சாறு பிழிந்து வடிகட்ட வேண்டும்.

**பயன்பாடு :** இலை உண்ணும் கம்பளிப்பூச்சிகள், புழுக்கள், வெட்டுக்கிளிகள் போன்றவற்றை கட்டுப்படுத்த உதவுகிறது. ஒரு குழம்பாக்கி (emulsifier) சேர்த்து தெளிக்க வேண்டும். அதிக அளவு இலைகள் தேவைப்படுவதால் (1 ஹெக்டேருக்கு சுமார் 80 கிலோ), இது நாற்றங்கால் மற்றும் சமையலறைத் தோட்டங் களுக்கு மிகவும் ஏற்றது.

**4. வேப்ப எண்ணெய் தெளிப்பு**

**தயாரிப்பு மற்றும் தெளிப்பு முறை :** 1 லிட்டர் தண்ணீரில் 15-30 மில்லி வேப்ப எண்ணெய் சேர்க்க வேண்டும். 1 மில்லி/லிட்டர் அளவில் ஒரு குழம்பாக்கி சேர்க்க வேண்டும். எண்ணெய் மற்றும் குழம்பாக்கி நன்கு கலப்பது மிகவும் முக்கியம். எண்ணெய் துளிகள் மிதக்கத் தொடங்குவதற்கு முன்பே தெளிக்க வேண்டும். கைத் தெளிப்பானை விட நாப்சாக் தெளிப்பான் பயன்படுத்துவது சிறந்தது.

மேலும் விவரங்களுக்கு **சே.திவ்யதர்ஷினி, இளங்கலை வேளாண் மாணவி மற்றும் முனைவர் பா.குணா, இணைப் பேராசிரியர், வேளாண் விரிவாக்க துறை, சு.சந்தியா மற்றும் உதவி பேராசிரியர் மற்றும் குழு மேற்பார்வையாளர், நாளந்தா வேளாண்மை கல்லூரி, எம்.ஆர்.பாளையம், திருச்சி. மின்னஞ்சல் : baluguna 8789@gmail.com, தொலைபேசி எண்: 99446 41459** ஆகியோரை தொடர்பு கொள்ளலாம்.

# மக்காச்சோளம் விதை சிகிச்சை பற்றி செய்முறை விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவி



மதுரை, பிப்.2

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டாரம், வீலிநாயக்கன்பட்டி கிராமத்தில் மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தை சேர்ந்த இறுதி ஆண்டு மாணவி K.A.அபிஷயா, விவசாயி களுக்கு மக்காச்சோளம் விதை சிகிச்சை பற்றி செயல்முறை விளக்கத்துடன் விளக்கினார்.

இதில் எப்படி விதை சிகிச்சை செய்ய வேண்டும், அதன் பயன்கள் என்ன, விதை மூலம் பரவும் நோய்கள் மற்றும் பூச்சி தாக்கத்தை கட்டுபடுத்தும் முறைகள், அதிக முளைச்சல் மற்றும் நல்ல மகசூல் பெற விதை சிகிச்சை அவசியம் என விவசாயி களுக்கு செயல் முறையுடன் விளக்கினார். இதில் விவசாயிகள் பங்கேற்று பயன் பெற்றனர்.

# ஊரக மதிப்பீட்டு சிறப்பு முகாம் நடத்திய வேளாண் கல்லூரி மாணவர்கள்



திருச்சி, பிப்.2

திருச்சிராப்பள்ளி மாவட்டம், இலால்குடி வட்டாரம், மேட்டுப்பட்டி கிராமத்தில் டாக்டர் எம்.எஸ். சுவாமி நாதன் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவர்கள் ஊரக வேளாண் பணி அனுபவம் பெறும் திட்டத்தின் கீழ் ஊரக பங்கேற்பு மதிப்பீட்டை நடத்தினர். அப்போது கிராமத்தின் வரைபடம், வள வரைபடம், கல்வியறிவு விகிதம், மக்கள் தொகை விகிதம், சிறு, குறு, பெரு விவசாயிகள் விகிதம், காலக்கோடு, கிராமத்தின் பிரச்சனை மரம் மற்றும் தீர்வு வரைபடம் போன்ற வரைபடங்களை மாணவர்கள் வரைந்திருந்தனர். இந்நிகழ்ச்சியில் மேட்டுப்பட்டி கிராமத்தை சேர்ந்த பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் பங்கேற்று மாணவர்களுடன் கலந்துரையாடினர்.

# பூஜ்ஜிய ஆற்றல் குளிர் ஊட்டும் அறை பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்திய வேளாண் கல்லூரி மாணவர்கள்



நாமக்கல், பிப்.2

பிஜிபி வேளாண்மை அறிவியல் கல்லூரி மாணவர்கள் கிராமப்புற அனுபவ பயிற்சியின் கீழ் நாமக்கல் மாவட்டம், எருமப் பட்டி வட்டாரம், தேவராயபுரம் கிராமத்தில் விவசாயிகளுக்கு செயல்விளக்கம் மூலம் பூஜ்ஜிய ஆற்றல் குளிர் ஊட்டும் அறை பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

பூஜ்ஜிய ஆற்றல் குளிரூட்டும் அறை (Zero Energy Cool Chamber) என்பது மின்சாரம் பயன்படுத்தாமல் இயற்கை குளிர்ச்சி முறையின் மூலம் காய்கறி மற்றும் பழங்களை குறுகிய காலத்திற்கு பாதுகாக்க உதவும் ஒரு எளிய பிந்தைய அறுவடை தொழில்நுட்பமாகும். இது ஆவியாக்கக் குளிர்ச்சி (Evaporative cooling) என்ற கோட்பாட்டின் அடிப்படையில் செயல்படுகிறது. இரட்டைச் சுவர் கொண்ட செங்கல் கட்டுமானத்தின் நடுவில் மணல் நிரப்பப்பட்டு அதனை எப்போதும் ஈரமாக வைத்தால், மணலில் உள்ள நீர் ஆவியாகும் போது சுற்றியுள்ள வெப் பத்தை உறிஞ்சி உள்ளே உள்ள வெப்பநிலையை 10-15°C வரை குறைக்கிறது மற்றும் ஈரப்பதத்தை 90-95% வரை அதிகரிக்கிறது. இதன் மூலம் காய்கறிகள் மற்றும் பழங்கள் நீண்ட நாட்கள் பாதுகாக்கப்படுகின்றன. இந்த குளிர் சேமிப்புக் கிடங்கில் தக்காளி, கத்தரி, மிளகாய், கீரைகள், பழங்கள் போன்ற வற்றை சேமிக்கலாம். சாதாரண நிலையில் 2-3 நாட்கள் மட்டுமே நீடிக்கும் பொருட்கள், இம்முறையில் 8-15 நாட்கள் வரை பாதுகாக்க முடிகிறது. குறைந்த செலவில் (ரூ.4,000-ரூ.6,000), மின்சாரம் தேவையில்லாமல் செயல் படுவதால் இது சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு மிகவும் பயனுள்ளதாகும். இருப்பினும் இது நீண்டகால சேமிப்பிற்கு ஏற்றதல்ல மற்றும் தினசரி நீர் பராமரிப்பு அவசியமாகும். இவ்வாறு ஆற்றல் இல்லாத குளிர் சேமிப்புக் கிடங்கு பிந்தைய அறுவடை இழப்புகளை குறைத்து விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தும் ஒரு முக்கியமான தொழில்நுட்பமாக விளங்குகிறது.

**Rithvik Pipe**

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# குறைந்து வரும் விவசாயம் மற்றும் விவசாயிகள். ஏன்? - அதிர்ச்சி தகவல்



இன்றைய கால கட்டத்தில் உலகளவிய அளவிலும் நம்முடைய நாட்டிலும் வேளாண் சாகுபடி பரப்பு படிப்படியாக குறைவது போல விவசாயம் மேற் கொள்ளும் விவசாயிகளும் குறைந்து வருகின்றனர் என்பது நமக்கு வேதனையாக மட்டுமல்லாது அதிர்ச்சியாக இருக்கிறது.

**வேளாண்மை பயிர் தொழில்?**

வேளாண்மை பயிர் தொழில் என்பது விவசாயிகளின் உயிராக இருந்தது, அது ஒரு காலத்திலே. தற்போது விவசாயம் என்பது ஒரு சவால் நிறைந்த தொழிலாகவும், நஷ்டம் ஏற்படும் தொழிலாகவும், உழைப்புக்கான ஊதியம் இல்லாத தொழிலாக இன்றைய தலைமுறையினர் கருதி வேகமாக மாற்று தொழிலை நோக்கி நகர்கின்றனர். இந்த நிலை நீடித்தால் வள்ளுவரின் குறள் (1036) தான் ஞாபகத்திற்கு வருகிறது.

**அது என்ன குறள் தெரியுமா?**

'உழவினார் கைம்மடங்கின் இல்லை
விழைவதும் விட்டோம் என பார்க்கும் நிலை.

**அதன் பொருள் :** விவசாயம் செய்யாவிடில் பற்றற்ற துறவி களும் கூட உணவின்றி உயிர் வாழ முடியாது இவ்வுலகில்.

**விவசாயத்தை விட்டு வெளியேறி வரும் நபர்கள் எண்ணிக்கை என்ன தெரியுமா?**

மேலை நாடுகளைப் போல அல்லாமல் இந்தியாவில் விவசாயம் என்பது ஒரு தொழில் அல்ல. உயிருடன் கலந்த உறவாக பாரம் பரியமாக பார்த்து வந்த மக்கள் தற்போது சாகுபடிக்கான செலவு கணிசமாக உயர்ந்துள்ளதால் போதிய வருமானமும் மகசூல் இழப்பு இல்லாததால் பலர் கைவிட தயாராக உள்ளதாக தெரிகிறது.

2021 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி நம்முடைய நாட்டில் ஒவ்வொரு நாளும் 2000 பேர் கைவிடுவதாக கூறப்பட்டுள்ளது. இதே நிலை தொடருமானல் வெகு விரைவில் விவசாயம் மறந்து போய் வேறு தொழிலுக்கு (கொத்தனார், சித்தாள்) செல்ல நேரிடும். சர்வதேச அளவிலும் இதே நிலை நீடிப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன.

**வேலை வாய்ப்பு இல்லாத கூலி தொழிலாளர்கள் எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா?**

சர்வதேச தொழிலாளர் நிறுவனம் (I.L.O) வெளியிட்டிருக்கும் புள்ளிவிபரபடி 1991-யில் மொத்த வேலைவாய்ப்பில் 43% விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த வேலைகளில் ஈடுபட்டனர். அதுவே 2023யில் 26%யாக குறைந்துள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

**அமெரிக்கா கொலராடோ பல்கலைக்கழகம் கூறுவதென்ன?**

உலகலாவிய அளவில் 2020யில் 61.6 கோடி விவசாய பண்ணைகள் இருந்த நிலையில் தற்போது அவை 27.2 கோடியாக சுருங்கி விட்டதாக அமெரிக்க பல்கலைக்கழகம் அதிர்ச்சியான தகவலை வெளியிட்டுள்ளது.

**விவசாயத்தை விட்டு வெளியேற என்னென்ன காரணங்கள்?**

1) பருவ நிலை மாற்றம். விதைப்பு காலத்தில் போதிய மழையின்மை. ஆனால் அறுவடை சமயத்திலே வெள்ளம் சூழ்ந்த நிலை.

**2) இடுபொருட்களின் விலையேற்றம்**

விதை, உரங்கள், பூச்சி மருந்துகளின் விலை தற்போது விண்ணை முட்டும் அளவிற்கு உயர்ந்து விட்டது, ஆனால் விளைவித்த விளை பொருட்களுக்கு கட்டுபடி இல்லாத விலை வீழ்ச்சி

**3) சாகுபடிக்கான செலவு அதிகரிப்பு**

கூலி, வாடகை போன்ற செலவுகள் படிப்படியாக உயர்வதால் நிலையற்ற வருமானம்.

**4) நிலையற்ற சந்தை வாய்ப்பு**

விதைக்கிற காலத்தில் கூடுதலான விலை, அறுவடை காலத்தில் கட்டுபடியாகாத விலை.

5) விவசாயத்தில் ஈடுபட இள வயதினர் விரும்புவதில்லை. 50 வயதிற்கு மேற்பட்டவர்களே இன்று விவசாயத்தில் உள்ளனர்.

மேலே குறிப்பிட்ட காரணங்களால் விவசாயிகள் விவசாயத்தை விட்டு வெளியேறுகின்றனர்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# பருத்தியில் உழவர் பெருவிழா



கோவை, பிப்.2

கோவை, வேளாண்மை அறிவியல் நிலையத்தில் பருத்தியில் உழவர் பெருவிழாவானது ஜனவரி 27 மற்றும் 28 ஆகிய தேதிகளில் நடைபெற்றது.

இவ்விழாவிற்கு அட்டாரி இயக்குனர் முனைவர் ஷேக் ஹி.மீரா மண்டலம் – ஹைதராபாத், சிறப்பு விருந்தினராக வந்திருந்தார். முதல் நாளன்று சிறப்பு விருந்தினர் வேளாண் அறிவியல் நிலையத்திற்கு வந்து மரக்கன்றுகளை நட்டு நமது தொழில் முனைவோர்களின் கண்காட்சியையும் திறந்து வைத்தார்.

நமது நிலையத்தின் தலைவர் மற்றும் நிர்வாக அறங்காவலர் முனைவர் மீனாட்சி சுந்தரம், சிறப்பு விருந்தினராக வந்திருந்த ATARI இயக்குனரை கௌரவித்தார். வேளாண்மை அறிவியல் நிலையத்தின் தலைவர் பொறுப்பு கோமதி, அனைவரையும் வரவேற்று நிகழ்ச்சியை தொடங்கினார். அவிநாசிலிங்கம் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பாரதி ஹரி ஷங்கர், கோவை மாவட்டம், விவசாயத்தில் ஒரு முன்னோடியாக இருக்கிறது, வேளாண்மை மற்றும் வேளாண் துறை சார்ந்த அனைத்து துறை களிலும் விவசாய பெண்கள் முன் வர வேண்டும் என்று கூறினார். மேலும் மத்திய பருத்தி ஆராய்ச்சி நிலையத்திலிருந்து வந்திருந்த முனைவர் சங்கர நாராயணன், பருத்தி சாகுபடி பற்றி விரிவாக எடுத்துக் கூறினார். மற்றும் மத்திய வேளாண் பொறியியல் நிறுவனத்திலிருந்து வருகை தந்திருந்த முனைவர் செந்தில்குமார், வேளாண்மை மற்றும் தோட்டக்கலை பயிர்களில் இயந்திரமய மாக்கலின் முக்கியத்துவத்தைப் பற்றி கூறினார். அடுத்தபடியாக நபார்டு வங்கியில் இருந்து வந்திருந்த திருமலை ராவ், வேளாண்மைக்கு ஏற்றவாறு சிறப்பு திட்டங்களை விவசாயிகள் பயன்படுத்துமாறு வலியுறுத்தினார். கோவை மாவட்டத்தின் வேளாண்மை இணை இயக்குனர், தமிழ்செல்வி, கோவை மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டாரங்களிலும் மத்திய மற்றும் மாநிலத் திட்டங்களை விவசாய பெருமக்கள் அனைவரும் பயன் படுத்துமாறு வலியுறுத்தினார். நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராய் வந்திருந்த முனைவர் ஷேக் ஹி.மீரா, கோவை மாவட்டத்தின் விவசாயிகள் மற்றும் விவசாய பெண்மணிகள் அனைவரிடமும் ஒரு சகோதரத்துவத்தை உணர்கிறேன்.

பருத்தியில் அடர் நடவு முறையில் 14 குவின்டால் வரை மகசூல் பெற்று அதிக லாபம் ஈட்ட முடியும் என்றும் கிணத்துக்கடவு மற்றும் மதுக்கரை ஆகிய வட்டாரங்களில் நீண்ட இழை பருத்தி சாகுபடி பரவலாக இருப்பதால் விவசாய பெருமக்கள் அனைவரும் பருத்தி சாகுபடி செய்ய முன்வர வேண்டும் மற்றும் தொண்டாமுத்தூர் நகராட்சியில் காய்கறி சாகுபடி அதிகளவில் பயிரிட வேண்டும் என்றார். மேலும் அவர் ஆனைமலை ஆகிய வட்டாரங்களில் கால்நடைகளுக்கு சிறந்த நுண்ணூட்டக் கலவைகளை வேளாண்மை அறிவியல் நிலையம் மூலம் வழங்கி கால்நடைகளை பராமரிக்க வேண்டும் என்றார்.




மேலும் அவர் ஆனைமலை ஆகிய வட்டாரங்களில் கால்நடைகளுக்கு சிறந்த நுண்ணூட்டக் கலவைகளை வேளாண்மை அறிவியல் நிலையம் மூலம் வழங்கி கால்நடைகளை பராமரிக்க வேண்டும் என்றார். மேலும் அவர் வேளாண் அறிவியல் நிலையங்களுக்கு புதிய தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு சென்றடைய சில பரிந்துரைகளையும் வழங்கினார். மேலும் நமது நிலையத்திலிருந்து மூன்று புத்தகங்கள் அதாவது பருத்தி பற்றிய தொகுப்பு, அங்கக வேளாண்மை மற்றும் பாலில் இருந்து மதிப்பு கூட்டல் இயக்குனர் வெளியிடப்பட்டோம். மற்றும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் விரிவாக்க கல்வி இயக்குனர் முனைவர் பி பி முருகன், கோவை மாவட்டத்தில் பருத்தி சாகுபடி மிக பரவலாக விவசாயிகள் பயிரிடுகின்றனர். அதுமட்டுமல்லாமல் காட்டு விலங்குகளின் தாக்குதலால் வேளாண்மை பயிர்கள் முற்றிலும் சேதம் அடைவதால் பருத்தி ஒரு மாற்றுப் பயிராக விவசாயிகளுக்கு அதிக லாபம் தரக்கூடியதாகவும் இருப்பதால் அனைத்து விவசாயிகளும் பருத்தி சாகுபடி செய்ய முன் வர வேண்டும் என்று கூறினார்.

அடுத்தபடியாக இயக்குனர் நமது அறிவியல் நிலையத்தின் மண் புழு திடல், அசோலா, VAM, தென்னங்கன்று நாற்றங்கால், சூரிய உலர்த்தி அழகு, தென்னை தோப்பு, வாழை தோட்டம், பருத்திச் செடிகளை பார்வையிட்டார். அதன் பின் நமது அலுவலகத்தின் மண் மற்றும் நீர் சோதனை செய்யும் ஆய்வகம், நிரந்தர கண்காட்சி ஆய்வகம் ஆகியவற்றை பார்வையிட்டு அனைத்து விஞ்ஞானிகளிடமும் அவர் கலந்துரையாடினார். இரண்டாம் நாளான 28.01.26 அன்று பன்னிமடை கிராமத்தைச் சேர்ந்த கிருஷ்ணசாமி ஐயாவின் தோட்டத்தில் ஒருங்கிணைந்த பண்ணையத்தை பார்வை யிட்டார். அங்கு தென்னை, பாக்கு, காப்பி, மிளகு மற்றும் வாழை ஆகிய வேளாண் பெயர்கள் ஊடுபயிராக சாகுபடி செய்திருந்தார். மேலும் மண்புழுத்திடல், ஆட்டுப்பண்ணை, கோழி வளர்ப்பு பண்ணை குட்டையில் மீன் வளர்ப்பு ஆகியவற்றை ஒன்றிணைந்து செய்த விவசாயத்தை பார்வையிட்டார். அடுத்தபடியாக பெருநாயக்கன் பாளையம் வட்டாரத்தில் உள்ள குப்பச்சிபாளையம் கிராமத்தில் பருத்திக்கான சிறப்பு திட்டத்தில் அடர் நடவு படுத்தியை நமது இயக்குனர் பார்வையிட்டு அதில் இயந்திரமாக்கல் மற்றும் பூச்சி மற்றும் நோய் மேலாண்மை, செடி வடிவமைப்பு பற்றியும் விவசாயிகளுடன் கலந்துரையாடி தெரிந்து கொண்டார். நமது வேளாண்மை அறிவியல் நிலையத்தில் இருந்து கள ஆய்விற்காக விவசாயிகளுக்கு அளிக்கப்பட்ட கொண்டைக்கடலை பயிரையும் பார்வையிட்டார். ஸ்ரீ கிருஷ்ணா துளசி பார்ம், சௌந்தர ஜோதியின் தோட்டத்தில் இயற்கை விவசாயத்தில் சாகுபடி செய்திருந்த தென்னை, கொண்டைக்கடலை மற்றும் காய்கறி பயிர்களை பார்வையிட்டு, பசுமை FPOவில் இருந்து வந்திருந்த விவசாயிகளிடம் கலந்துரையாடினார்.

# மைக்ரோகிரீன்ஸ் - ஒரு பார்வை



மைக்ரோகிரீன்ஸ் மற்றும் செங்குத்து வேளாண்மை விவசாயிகளுக்கு குறைந்த முதலீடு, குறைந்த காலம், அதிக வருமானம் தரக்கூடிய நவீன வேளாண்மை முறை களாகும்.

பாரம்பரிய வேளாண்மையை மாற்றாமல், அதனுடன் இணைந்துப் பயன்படுத்தினால் விவசாயிகளின் வாழ்வாதாரம் மேம்படம்."குறைந்த நிலம் – குறைந்த காலம் அதிக லாபம்" என்பதே மைக்ரோகிரீன்ஸ் மற்றும் செங்குத்து வேளாண்மை யின் வெற்றி மந்திரம்.

## மைக்ரோகிரீன்ஸ் என்றால் என்ன?

மைக்ரோகிரீன்ஸ் என்பது காய்கறி மற்றும் மூலிகை விதைகளை விதைத்த பின் 7 முதல் 15 நாட்களுக்குள் அறுவடை செய்யப்படும் இளம் முளைகள் ஆகம். இவ சிறிய அளவில் இரந்தாலும், அதிக சதத்துச்சேர்க்க கொண்டவை.

## பொதுவான மைக்ரோகிரீன்ஸ் வகைகள்

✓முள்ளங்கி

✓வெந்தயம்

✓கொத்தமல்லி

✓ப்ரோக்கோலி

## மைக்ரோகிரீன்ஸின் ஊட்டச்சத்து முக்கியத்துவம்

மைக்ரோகிரீன்ஸ், முழுமையாக வளர்ந்த காய்கறிகளைவிட 4 முதல் 10 மடங்கு அதிக சதத்துக்கள் காெண்டதாக ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன.

## முக்கிய சத்துக்கள்

✓வைட்டமின் A, C, E, K

✓இரும்பு, கால்சியம், மக்னீசியம்

✓ஆன்டி–ஆக்சிடென்ட்கள்
✓நார் சத்து

இதனால் மைக்ரோகிரீன்ஸ் ஆரோக்கிய உணவாக நகர்ப்பற மக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

**மைக்ரோகிரீன்ஸ் சாகுபடி முறை**

மைக்ரோகிரீன்ஸ் சாகுபடி மிகவும் எளிமையானது மற்றும் குறைந்த முதலீட்டில் தொடங்கலாம்.

**தேவையான பொருடகள்**

✓தரமான விதைகள்
✓டிரே / பிளாஸ்டிக் பெட்டி
✓கொகோபீட் / மண் கலவை
✓தண்ணீர் தெளிப்பான்

**சாகுபடி நடைமுறை**

1. டிரே–யில் கொகோபீட்டை பரப்புதல்
2. விதைகளை சமமாக தூவுதல்
3. தண்ணீர் தெளித்தல்
4. 2–3 நாட்கள் இந்நிலையில் வைத்தல்.
5. 7–15 நாட்களில் அறுவடை

**மக்ரோகிரீன்ஸ் சாகுபடியின் நன்மைகள்**

1. மிகக் குறைந்த நிலப்பரப்பு போதும்
2. குறுகிய காலத்தில் (10–15 நாட்கள்) வருமானம்
3. நீர் பயன்பாடு குறைவு
4. ரசாயனங்கள் தேவையில்லை
5. வீட்டு மாடி, பால்கனி, குடில் போன்ற இடங்களில் செய்–யலாம்.

முடிவுரை : மைக்ரோகிரீன்ஸ் விவசாயிகளுக்கு குறைந்த முதலீடு, குறைந்த காலம், அதிக வருமானம் தரக்கூடிய நவீன வேளாண்மை முறையாகும். பாரம்பரிய வேளாண்மையை மாற்றாமல், அதனுடன் இணைத்துப் பயன்படுத்தினால் விவசாயிகளின் வாழ்வாதாரம் மேம்படும்.

தகவல் : **ரா.சரண்யா, பிஜிபி வேளாண்மை அறிவியல் கல்லூரி மாணவி, நாமக்கல்.**

Rithvik Pipe

IS 4985 : 2021 IS 9537

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

POWERGRID BHEL

Factory
Rithvik Pipe Company, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# சைலேஜ் தயாரிப்பு குறித்து பயிற்சி மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்திய வேளாண் கல்லூரி மாணவி



மதுரை, பிப்.2

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டம், கோடங்கிநாயக்கன்பட்டி ஊராட்சிக்குட்பட்ட தோப்புப்பட்டி கிராமத்தில் 26.01.26 அன்று நடைபெற்ற கிராமசபை கூட்டத்தின் போது, சைலேஜ் தயாரிப்பு குறித்து பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியை மதுரை வேளாண்மை கல்லூரி இறுதியாண்டு பயிலும் மாணவி அபிராமி.பா, தலைமையில் நடத்தப்பட்டது. மாட்டுத்தீவன பற்றாக்குறை ஏற்படும் வறட்சிக் காலங்களில் பசுந்தீவனத்தை நீண்ட நாட்கள் பாதுகாத்து பயன்படுத்தும் முறையாக சைலேஜ் தயாரிப்பு முக்கியத்துவம் குறித்து கிராம மக்களுக்கு விளக்கப்பட்டது.

பயிற்சியின் போது, சைலேஜ் என்றால் என்ன, சைலேஜ் தயாரிப்பதற்கான பயிர்கள், வெட்டும் காலம் மற்றும் முறைகள், குழி / பாலித்தீன் பை மூலம் சைலேஜ் தயாரிக்கும் நடைமுறை, மாடுகளுக்கான பயன்கள் மற்றும் செலவுக் குறைப்பு, என பல்வேறு அம்சங்கள் படவுருக்கள் மற்றும் விளக்கப்படங்கள் மூலம் எளிய முறையில் எடுத்துரைக்கப்பட்டது.

கிராமசபை கூட்டத்தில் கலந்து கொண்ட பெண் விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்பாளர்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டு தங்களின் சந்தேகங்களை எழுப்பினர். குறிப்பாக, தீவன செலவு குறைப்பு, பால் உற்பத்தி அதிகரிப்பு மற்றும் கால்நடை ஆரோக்கியம் குறித்து விவாதிக்கப்பட்டது.

இவ்விழிப்புணர்வு நிகழ்ச்சி மூலம் கிராம மக்களுக்கு கால்நடை பராமரிப்பு மற்றும் தீவன மேலாண்மை குறித்த அறிவு மேம்பட்டதுடன், நவீன வேளாண் தொழில்நுட்பங்களை கிராம மட்டத்தில் கொண்டு சேர்க்கும் கிராமப்புற வேளாண்மை பணி அனுபவத் திட்டத்தின் முக்கியத்துவமும் வெளிப்பட்டது.

# சேமிப்பகத்தில் பூச்சி மேலாண்மை

## தானிய சேமிப்பின் போது ஏற்படும் பூச்சிகளை கண்காணித்து அழிக்கவல்ல பூச்சிப்பொறிகள்

தானிய சேமிப்பின்போது ஏற்படும் பூச்சிகள் பெரும்பாலும் வயலிலிருந்து சேமிப்பு கிடங்குகளுக்கும், அறைகளுக்கும் பரவுகின்றன. தானியங்கள் சேமிக்கப்படும்போது, ஆரம்ப காலத்தில் மிகமிக குறைந்த அளவேஇப்பூச்சிகள் காணப்படுகின்றன. இந்த ஆரம்ப காலத்திலேயே குறிப்பிட்ட பாதுகாப்பு நடவடிக்கை எடுப்பதன் மூலம் சேமிப்பு காலத்தில் மாலை வேளையிலும், காற்றோட்டம் அதிகமுள்ள இடங்களை நோக்கி சுற்றித் திரியும் இயல்புடையது. எனவே இக்காலங்களில் இப்பூச்சிகள், உண்ணுவதற்கு தானியங்கள் இருந்து போதிலும், தானியங்களை விட்டு வெளியே வரும். பூச்சிகளின் இந்த இயற்கையான இயல்பை பயன்படுத்தி ஆரம்ப காலத்திலேயே அவைகளை தானியங்களிலிருந்து வெளியேற்ற தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் பல புதிய சாதனங்களைக் கண்டுபிடித்துள்ளது.

### கூம்பு வடிவ பொறி



பொதுவாக இப்பொறி பம்பரம் போன்று காணப்படும். இப்பொறியின் மூடி 3 மி.மீ. துவாரங்களை (ஒரு சதுர அங்குலத்தில் 29-30 துவாரங்கள்) கொண்ட ஒரு தகடால் செய்யப்பட்டது. இதை எளியதாக கூம்பு போன்ற வடிவத்திலிருந்து பிரித்தெடுக்கலாம். இப்பொறியின் கூம்பு வடிவ பகுதியின் உள்ளே கோந்து பொருள்களை நன்கு தடவி 3 மி.மீ. துவாரங்களை கொண்ட தகடால் மூடி, சேமிக்கப்படும் பயறுகளின் கலனின் மேற்பகுதியில் மூடியின் கீழ்ப்பகுதி துவாரங்கள் மட்டும் பயிரின் உள்ளே இருக்குமாறு பதித்து வைக்க வேண்டும்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பொறியில் கோந்துப் பொருட்களை பயன்படுத்தத் தேவையில்லை. பயறுகளிலிருந்து வெளிவரும் வண்டுகள் இனப்பெருக்கத்திற்காக கலனின் மேற்பகுதியை நோக்கி வரும்போது பொறியில் உள்ள துவாரங்களில் நுழைந்து, சறுக்கி, குழாய் வடிவம் கொண்ட பொறியின் அடிப்பாகத்தில் உள்ள பகுதியில் மாட்டிக் கொள்ளும். இதன் மூலம் பயறு வண்டுகளின் சேதத்தை குறைக்கலாம்.

## பயறு வண்டுகளை பிடித்தழிக்கும் பொறி



இப்பொறி, பம்பரம் போன்ற மூடியையும் அதன் கீழ்ப்பாகம் குழாய் போன்ற வடிவமைப்பையும் கொண்டது. மூடியிலும், குழாய் பகுதியிலும் 3 மி.மீ. துவாரங்கள் உள்ளன. பயறுகளில் காணப் படும் வண்டுகள் இனப்பெருக்கத்திற்காக கலனின் மேலப்குதியை நோக்கி வரும். அச்சமயம் பொயியில் உள்ள துவாரங்களில் நுழையும். பின்னர் சறுக்கி குழாய் வடிவம் கொண்ட பொறியின் அடிப்பாகத்தில் உள்ள பகுதியில் மாட்டி கொள்ளும். பயறுவகைப் பயிர்களை சேமிக்கும்போது வண்டுகள் வெளிப்படுதலைக் கண்டறிய வேண்டும். இதனைக் கண்டுபிடித்துவிட்டால் தாய் மார்கள், உழவர்கள் மற்றும் அனைவரும் சூரியஒளியை பயன்பத்தி பயறுகளில் இருந்து வெளிப்படும் வண்டுகள் இடும் முட்டைகளை எளிதாக அழித்துவிடலாம்.

## பூச்சிகளைத் தானாகவே அகற்றும் சேமிப்புக்கலன்



சேமிப்புத் தானியங்களை பல வகையான பூச்சிகள் தாக்கி அழிக்கின்றன. இப்பூச்சி களைத் தானாகவே தானியங்களிலிருந்து அகற்ற ஒரு புதிய சேமிப்புக்கலன் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இதை வீட்டு உபயோகத் திற்காக வைத்துள்ள தானியங்கள் மற்றும் விதைக்காக வைத்துள்ள தானியங்களில் பூச்சிகளைக் கட்டுப் படுத்தப் பயன்படுத்தலாம். மற்றும் இக்கலனில் அரிசி, கோதுமை, சோளம் பயறு வகைத் தானியங்களை சேமிக்கலாம். இத்தானியங் களைத் தாக்கும் அரிசிக்கூன் வண்டு, மாவு வண்டு, பயறு வண்டு போன்ற பல வகையான வண்டுகள் தானியத்தில் அங்கும் இங்கும் நடமாடும் போது கலனியல் உட்பாகத்திலுள்ள துவாரங்கள் வழியாக வெளிவந்து சறுக்கி கலனின் கீழ் பாகத்தில் உள்ள பெட்டியில் விழுந்து அகப்பட்டுக் கொள்கின்றன. இவ்வாறு விழுந்த பூச்சிகள் வெளியே வராத வண்ணம் இக்கலனின் அடிப்பாகம் வடிவமைக்கப்பட்டு உள்ளது. இக்கலன்கள் 2 கிலோ, 25 கிலோ, 100 கிலோ மற்றும் 500 கிலோ என்ற கொள்ளளவுகளில் உருவாக்கப்பட்டுள்ளன.

## ஊதாக்கதிர் விளக்குப்பொறி

சேமிப்புக் கிடங்குகளில் காணப்படும் பூச்சிசகளைக் கவர்ந்து அழிக்க ஊதாக் கதிர் விளக்குப் பொறி கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இப்பபொறி ஊதாக்கதிர்களை வெளியிடும் 4 வாட் விளக்கினைக் கொண்டது. இப்பொறியை சேமிப்புக் கிடங்களில் தரையிலிருந்து சுமார் 1.5 மீ உயரத்தில் சுவர்ப் பகுதியின் அடியில் வைத்தல் வேண்டும். நெல் மற்றும் அரிசியைத் தாக்கும் ரைசோபர்தா, டிரை போலியம் வண்ட போன்ற பல வகை வண்டகள் அதிக அளவில்



இப்பொறியால் ஈர்க்கப்படுகின்றன. இப் பொறியைக் குறிப்பாக தானியங்களை நீண்ட நாள் சேமித்து வைக்கும் போதும், பூச்சி தாக்கப்பட்ட தானிய மூட்டைகள் கிடங்கிற்கு வரும்போதும், புகை மூட்டம் போட்ட பின்பும் பயன்படுத்துவதன் மூலம் பூச்சிகளின் சேதம் விரைவாகப் பெருகுவதைத் தடுக்கலாம்.

தகவல் : **வ.உ.சிதம்பரனார் வேளாண்மை கல்லூரி நான்காம் ஆண்டு இளங்கலை மாணவிகள்–க.அம்பிகா, மு.அபிநயா மற்றும் குழுவினர்கள்.**



# டி.வாடிப்பட்டி ஒருங்கிணைந்த விவசாய முறை விவசாயிகள் உற்பத்தியாளர் நிறுவனத்தைப் பார்வையிட்ட வேளாண் கல்லூரி மாணவிகள்



மதுரை, பிப்.2

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டாரத்தில் செயல்பட்டு வரும் டி.வாடிப்பட்டி ஒருங்கிணைந்த விவசாய முறை விவசாயிகள் உற்பத்தியாளர் நிறுவனத்தை (TIFS FPC) திருச்சி அன்பில் தர்மலிங்கம் வேளாண்மைக் கல்லூரி மாணவிகள் கிராமப்புற வேளாண் பணி அனுபவத்தின் ஒரு பகுதியாக பார்வையிட்டனர்.

இந்த விவசாயிகள் உற்பத்தியாளர் நிறுவனம் 23.12.29 அன்று தொடங்கப்பட்டு, FPO சட்டம், 2013ன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்நிறுவனத்தில் தற்போது 1000 விவசாயிகள் உறுப்பினர்களாக உள்ளனர். இந்த நிறுவனத்தின் தலைவராக பி. செல்லப்பாண்டி, பணியாற்றி வருகிறார். மேலாண்மை இயக்குநராக எஸ்.மணி மாறன், செயல்பட்டு வருகிறார். நிறுவனத்தின் நிதி தொடர்பான பணிகளை ஞானசேகரன் கவனித்து வருகிறார். இந்த FPO-வின் உறுப்பினர்கள் முக்கியமாக தேங்காய், நெல், வாழை மற்றும் சில காய்கறிகள் போன்ற பயிர்களை சாகுபடி செய்து வருகின்றனர். விவசாயிகளுக்கு நிலையான மற்றும் தொடர்ச்சியான வருமானம் கிடைக்க வேண்டும் என்பதே இந்த நிறுவனத்தின் முக்கிய நோக்க மாகும். அதன்படி, கீரைகள் மற்றும் பால் மூலம் தினசரி வருமானம், வாராந்திர விற்பனை மூலம் வருமானம், மற்றும் மாதாந்திர, ஆண்டாந்திர பயிர் வருமானம் ஆகியவற்றை உறுதி செய்யும் வகையில் செயல்படுகிறது. இந்த நிறுவனத்திற்கு சொந்தமான டிராக்டர், வாழை தோல் நீக்கும் இயந்திரம் (Banana Dehusker), நெல் அரைக்கும் இயந்திரம் (Paddy Huller) போன்ற உப கரணங்கள் உறுப்பினர்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

மேலும், இந்த ய்ணேநு மதிப்பூட்டப்பட்ட (Value Added) பொருட்கள் தயாரித்து விற்பனை செய்வதிலும் ஈடுபட்டு வருகிறது. இப் பொருட்கள் அண்ணாநகர் பேருந்து நிலையம் மற்றும் சொக்கி குளம் போன்ற இடங்களில் விற்பனை செய்யப்படுகின்றன. பொருட் களின் பேக்கிங் பணிகள் திருமங்கலத்தில் நடைபெறுகின்றன.

இந்த நிறுவனத்தால் தயாரிக்கப்படும் மதிப்பூட்டப்பட்ட பொருட்களில் லட்டு, குக்கீஸ், வர்ஜின் தேங்காய் எண்ணெய் ஆகியவை அடங்கும். அதோடு, அலோவேரா சோப்பு, பப்பாளி சோப்பு, குப்பைமேனி (Indian Acalypha) சோப்பு, அவரம்பூ சோப்பு மற்றும் வேப்பிலை சோப்பு போன்ற இயற்கை சோப்புகளும் தயாரிக்கப்படுகின்றன.

ஒரு லிட்டர் தேங்காய் எண்ணெயிலிருந்து 10 சோப்புகள் தயாரிக்கப்படுகின்றன. ஒவ்வொரு சோப்பின் விலை ரூ.80 ஆகும். இந்த FPO-வின் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தலை மேம்படுத்தும் நோக்கில், TNIAMP திட்டத்தின் கீழ் ரூ.30 லட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது. விவசாயிகளை ஒருங்கிணைத்து, மதிப்பூட்டப்பட்ட பொருட்கள் மூலம் சந்தையில் நல்ல வரவேற்பைப் பெற்று வரும் இந்த விவசாயிகள் உற்பத்தியாளர் நிறுவனம், கிராமப்புற பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு சிறந்த முன்னுதாரணமாக திகழ்கிறது.


# சோளப் பயிரில் விதை கடினப்படுத்தல் முறையை எடுத்துரைத்த வேளாண் கல்லூரி மாணவி



மதுரை, பிப்.2

மதுரை வேளாண்மைக் கல்லூரி மாணவி நாக நந்தினி பா., தனது ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டம் (RAWE) இன் ஒரு பகுதியாக, தே.கல்லுப்பட்டி வட்டாரம், வே. ரெட்டிரப்பட்டி கிராமத்தில் சோளப் பயிரில் விதை கடினப்படுத்தல் (Seed Hardening) முறையைப் பற்றிய களவிளக்க நிகழ்வை நடத்தினார். பொட்டாசியம் டைஹைட்ரஜன் பாஸ்பேட் (Potassium dihydrogen phosphate) பயன்படுத்தி விதை கடினப்படுத்தல் செய்வதன் மூலம் வறட்சித் தன்மையை எதிர்க்கும் திறனை அதிகரிக்கும் முக்கியமான தொழில்நுட்பமாகும் இந்த முறையால் குறைந்த ஈரப்பத நிலையிலும் விதைகள் சிறப்பாக முளைப்பதுடன் சீரான முளை உருவாகி, பயிர் விளைச்சல் சுமார் 10 சதவீதம் வரை அதிகரிக்கும்.

இந்த நிகழ்வில் பத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு, இத்தொழில்நுட்பத்தை நேரடியாக அறிந்து பயன் பெற்றனர்.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# வாழையில் நெமட்டோடு கட்டுப்பாடு முறை எடுத்துரைத்த வேளாண் கல்லூரி மாணவி



தேனி, பிப்.2

தேனி மாவட்டம், சுருளிப்பட்டி பகுதியில் உள்ள வாழை தோட்டங்களில் கன்றுகள் நடும் போது அதிகமாக தாக்கம் ஏற்படுத்தும் நெமட்டோடு (Nematode) பிரச்சினையை கட்டுப்படுத்த, குறைந்த செலவிலான மற்றும் இரசாயனமில்லா முறையாக வாழை கன்று சிகிச்சை (Sucker Treatment) குறித்து வேளாண்மை கல்லூரி மாணவி மரிய சாணியா செயல்விளக்கம் அளித்தார்.

**நெமட்டோடு தாக்கத்தின் அறிகுறிகள்**

- கன்றுகளின் வேர்களில் வீக்கம் மற்றும் அழுகல்
- வாழை செடியின் வளர்ச்சி மந்தமாகுதல்
- இலைகள் மஞ்சள் நிறமாக மாறுதல்
- செடி சாய்ந்து விழுதல் (Toppling)
- குலை சிறியதாக உருவாகுதல்
- மகசூல் கணிசமாக குறைதல்

**செயல்விளக்கம்**

முதலில் ஆரோக்கியமான வாழை கன்றுகள் தேர்வு செய்யப்பட்டன. கன்றின் அடிப்பகுதியில் உள்ள பழைய, அழுகிய வேர்கள் மற்றும் தேவையற்ற பகுதி வெட்டி சுத்தம் செய்யப்பட்டது. பின்னர், நீம் கேக் 5 கிலோ + மாட்டு சிறுநீர் 5 லிட்டர் + நீர் 50 லிட்டர் கலந்து கரைசல் தயாரிக்கப்பட்டது. இந்த கரைசலில் வாழை கன்றுகளை 20-30 நிமிடங்கள் முழுமையாக நனைக்கப்பட்டது. மாற்றாக, சூடுநீர் சிகிச்சை (Hot Water Treatment) முறையில், 50-55°C வெப்பநிலையுள்ள நீரில் கன்றுகளை 20 நிமிடங்கள் நனைத்து, நெமட்டோடுகளை அழிக்கும் முறையும் விவசாயிகளுக்கு விளக்கப்பட்டது. சிகிச்சை செய்யப்பட்ட கன்றுகள் நிழலில் உலர்த்தப்பட்ட பின் நடவு செய்யப்பட்டது.

**Sucker Treatment முறையின் நன்மைகள்**

- நெமட்டோடு தாக்கம் ஆரம்பத்திலேயே கட்டுப்படும்
- செடியின் வேர் வளர்ச்சி மேம்படும்
- செடி உறுதியாக வளர்ந்து சாய்வது குறையும்
- இரசாயன மருந்து பயன்பாடு குறையும்
- வாழை மகசூல் மற்றும் தரம் அதிகரிக்கும்
- சுற்றுச்சூழலுக்கும் மனித உடலுக்கும் பாதுகாப்பானது

இந்த செயல்விளக்கம், சுருளிப்பட்டி பகுதி வாழை விவசாயி களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது. வாழை கன்று சிகிச்சை முறை, நெமட்டோடு கட்டுப்பாட்டிற்கு ஒரு எளிய, நிலையான மற்றும் இயற்கை தீர்வாக விவசாயிகளால் பாராட்டப்பட்டது.

# நுண்ணீர் பாசன திட்டத்தை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்திய வேளாண் கல்லூரி மாணவிகள்

தஞ்சாவூர், பிப்.2

தஞ்சாவூர் பகுதியில் அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரி மாணவிகள் விவசாயிகளுக்கு நுண்ணீர் பாசன திட்டத்தை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தினர். இதில் அவர்கள் கூறியதாவது, தண்ணீர் பற்றாக்குறை இருக்கின்ற இடங்களில் அதிகமாக நீர் செலவிடுவதை விட நுண்ணீர் பாசன முறையை பயன்படுத்துவதன் மூலம் நமக்கு நீர் சேமிப்பும் அதிகரிக்கிறது மற்றும் நீர் தட்டுப்பாடும் குறைகிறது.



இதற்காக நம் தமிழ்நாடு அரசு ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்தி இருக்கிறது. அதில் நுண்ணீர் பாசன திட்டம் அமைக்க மானியமும் வழங்குகின்றது. அதற்கு Pradhan mantri krishi shinchayee yojana என்று பெயர். இதில் சிறு, குறு விவசாயிகளுக்கு 100% மானி யமும், மற்ற விவசாயிகளுக்கு 75% மானியமும் வழங்கப்படுகிறது. இத்துடன் அத்திட்டத்தில் பதிய தேவையான நகல்கள் தொலைபேசி எண், குடும்ப அட்டை நகல், வங்கி கணக்கு புத்தகம், ஆதார் அட்டை ஆகியவை தேவை என மக்களுக்கு எடுத்துரைத்தும் துண்டு பிரசுரம் வழங்கியும் எடுத்துரைத்தனர்.

# பூச்சி கட்டுப்பாட்டிற்கான 3G தாவர கரைசல் தயாரிப்பு மற்றும் பயன்பாடு : செய்முறை விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவிகள்

தேனி, பிப்.2

தேதி மாவட்டம், கம்பம் வட்டாரம், N.T.பட்டியில் விவசாயி களுக்கு இயற்கை, குறைந்த செலவு மற்றும் சுற்றுச்சூழலுக்கு பாதுகாப்பான பூச்சி மேலாண்மை முறையாக 3G (பச்சை மிளகாய், பூண்டு, இஞ்சி) தாவர கரைசல் தயாரிப்பு மற்றும் அதன் பயன்பாட்டை குறித்து மதுரை வேளாண்மை கல்லூரி மாணவிகள் செயல் விளக்கம் அளித்தனர்.



**3G கரைசலின் முக்கியத்துவம்**

1. இயற்கை தாவர பூச்சிக்கொல்லி
2. உறிஞ்சும் மற்றும் இலை தின்னும் பூச்சிகளை கட்டுப்படுத்தும்
3. பயிர், மண் மற்றும் பயனுள்ள பூச்சிகளுக்கு பாதுகாப்பானது
4. இரசாயன பூச்சிக்கொல்லி பயன்பாட்டை குறைக்கும்
5. எளிதில் கிடைக்கும் பொருட்களால் தயாரிக்கலாம்.

**தயாரிப்பு முறை**

1. பச்சை மிளகாய், பூண்டு, இஞ்சியை நன்றாக கழுவவும்.
2. மூன்றையும் சேர்த்து நன்றாக அரைத்து விழுதாக மாற்றவும்.
3. அந்த விழுதை 10 லிட்டர் தண்ணீரில் கலந்து நன்றாக கலக்கவும்.
4. மூடி வைத்து 12-24 மணி நேரம் ஊறவிடவும்.
5. பின்னர் சுத்தமான துணியால் வடிகட்டவும்.
6. வடிகட்டிய கரைசல் பயன்படுத்தத் தயாராகும்.

**அளவு மற்றும் பயன்பாடு**

**1.பயன்பாட்டு அளவு :** ஏக்கருக்கு 3-5 லிட்டர்
**2.நீரில் கலக்கும் அளவு :** ஏக்கருக்கு 200 லிட்டர் தண்ணீர்
**3.பயன்பாட்டு முறை :** தெளிப்பு (Knapsack sprayer)
**4.தெளிக்கும் நேரம் :** காலை அல்லது மாலை
**5.முறை :** 7-10 நாட்களுக்கு ஒரு முறை (பூச்சி தாக்கத்தை பொறுத்து)

**பொருத்தமான பயிர்கள்**

1. நெல்

2. காய்கறி பயிர்கள் (கத்திரிக்காய், மிளகாய், தக்காளி, வெண்டை)
3. பயறு வகைகள்
4. எண்ணெய் வித்துகள் & பழப்பயிர்கள்

**எதிர்பார்க்கப்படும் பலன்கள்**

1. பூச்சி தாக்கம் குறையும்
2. பயிர் ஆரோக்கியம் மேம்படும்
3. இரசாயன பூச்சிக்கொல்லி செலவு குறையும்
4. நிலைத்த மற்றும் பாதுகாப்பான விவசாயம் மேம்படும்

இந்த செயல்விளக்கம் N.T.பட்டி பகுதி விவசாயிகளிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது. மதுரை வேளாண்மை கல்லூரி மாணவிகள் வழங்கிய இந்த செயல்விளக்கம், இயற்கை முறையில் பூச்சிகளைக் கட்டுப்படுத்துவது குறித்த விழிப்புணர்வை விவசாயிகளுக் கிடையில் ஏற்படுத்தியது.

## தெளிப்பான்கள் உங்கள் பயிர்களுக்கு ஏற்ற தேர்வு செய்முறை விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவி



மதுரை, பிப்.2

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டாரம், மைக்கேல் பாளையம் கிராமத்தில் மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தை சேர்ந்த இறுதி ஆண்டு மாணவி செ.அஸ்விகா, விவசாயிகளுக்கு 'தெளிப்பான்கள் உங்கள் பயிர்களுக்கு ஏற்ற தேர்வு' என்ற தலைப்பில் செயல்முறை விளக்கத்துடன் விளக்கினார்.

இதில் விவசாயிகளுக்காக தெளிப்பான் (Sprayer) சரியான முறையில் கையாளுதல் குறித்த விளக்கக் காட்சியை நடத்தினார். இந்த நிகழ்ச்சியில், மருந்து கலவை தயாரிப்பு, சரியான நாசல் (Nozzle) தேர்வு, தெளிப்பு அழுத்தம், பாதுகாப்பு முன்னெச்சரிக்கை முறைகள் மற்றும் தெளிப்பின் போது கவனிக்க வேண்டிய தொழில்நுட்ப அம்சங்கள் குறித்து விவசாயிகளுக்கு தெளிவாக எடுத்துரைக்கப்பட்டது. மேலும், மருந்து வீணாவதைத் தவிர்த்து, பயிர்களுக்கு சமச்சீர் தெளிப்பு கிடைக்கும் வகையில் தெளிப்பான் களை சரியாக பயன்படுத்துவதன் முக்கியத்துவம் விளக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட விவசாயிகள், இந்த பயிற்சி தங்களுக்கு பயனுள்ளதாக இருந்ததாக தெரிவித்தனர்.